*தஞ்சை துணைக்கோட்ட குற்றவியல் நீதிமன்றம்.

524—(*வினா எண். 9771) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாநகரில் இயங்கிவரும் துணைக் கோட்ட குற்றவியல் நீதிமன்றத்தை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள் அமைக்க திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

மாவட்டங்களில் மக்கள் நீதிமன்றங்கள்

525—(*வினா எண். 10805) திரு. சைதை சா. துரைசாமி, திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைநகரங்களில் மக்கள் நீதிமன்றங்கள் துவக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நீதிமன்றங்கள் எப்போது துவக்கப் படும்? எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களிலே முதன் முதலிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்கிற விவரத்தையும், இந்த மக்கள் நீதிமன்றத்தில் என்னென்ன வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிட்சார்த்தமாக 15—2—1986 அன்று தமிழகத்திலே மக்கள் நீதிமன்றம் முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அது நல்ல வெற்றியை, பலனைத் தந்திருப்பதை அரசு அறிந்திருக்கிறது. அதன் காரணமாக அனைத்து மாவட்டத்திற்குமே

1987 ஏப்ரல் 28]

இதை நீட்டிக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதின் மூலம் நீதிமன்றங்களில் வழக் காடுவதைத் தடுத்திடுவது இதனுடைய முதல் நோக்கம். அடுத்து, நீதிமன்றங்களிலும், நடுவர் மன்றங்களிலும் முடிவுறாமல் இருக்கும் வழக்குகளையும், தகராறுகளையும் உயர் நீதிமன்றம் ஏற்கனவே அனுமதித்திருக்கிற நடைமுறையின் அடிப்படையில் சம்பந்தப் பட்ட தரப்பினருடைய இசைவைப் பெற்று தீர்த்து வைத்தல் இந்த மக்கள் நீதிமன்றத்தினுடைய அடுத்த நோக்கம்.

இதில் குறிப்பாக ஏழைகள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு முன்னுரிமை தந்து, முதற்கட்ட மாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-40)

திரு. டி. ஆர். வேங்கடராமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நீதிமன்றம் பரிட்சார்த்தமாக, வெற்றிகரமாக நடந்து வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் தகவல் தந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த மக்கள் நீதிமன்றம் என்பது இன்றைக்கு இந்தியாவில் பல இடங்களில் பரவலாக இயங்க ஆரம்பித்திருந்தாலும் அதற்கு ஒரு லீகல் பேசிஸ், சட்டப்படியான அனுமதி இருப்பதாகத் தெரியவில்லை. ஆதவே அந்தச் சட்ட அனுமதியை, அதற்கான ஒரு லீகல் ஸ்டான்டிங்கை, ஒரு லீகல் புரசீஜரை வழங்குவதற்காக, தமிழக அரசு முதன் முதலிலே, Legal standing and Legal Procedure என்று சொல்லப் படுகிற அந்த நீதிமன்றச் சட்டத்தைத் திருத்தி இதற்கு ஒரு லீகல் பேசிஸைக் கொடுக்க முன்வருமா? ஆம் என்றால், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அகில இந்திய மட்டத்தில், நீதித்துறை மந்திரியிலும், அரசு மந்திரியிலும் ஆயப்பட்டது. If legal basis is given, then this become a judicial system

[மாண்புமிகு திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 28

என்று ஆகிவிடும் என்ற காரணத்தால், அதற்கு மாறாக mostl settlement out of Court என இதைக் கணக்கில் எடுக்கவேண்டு மென்றும், இருதரப்பினருடைய இசைவைப் பெற்று வழக்கு களைத் தீர்ப்பதில்தான் வெற்றி அதிகமாக இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டுதான் உச்ச நீதிமன்றமும், பல உயர்நீதி மன்றங் களும் மத்திய அரசுக்கு கருத்தைக் கூறி, மாநில அரசுகள் அதை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்கள் பெண்கள் வழக்கு களை விசாரிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெண்கள் வழக்குகள் என்றால், வரதட்சணை போன்ற அந்த வழக்குகளையா அல்லது மாமியார் மருமகள் தகராறில் தீ வைத்து, கொளுத்திக் கொள்கிறார்களே, அதுபோன்ற வழக்கு களையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பத் தகராறு வழக்குகளை இதில் முன்னுரிமை கொடுத்து விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வரதட்சணை, கற்பழிப்பு போன்ற கொடிய வழக்குகள் சம்பந்தப்பட்டவை பொறுத்தவரைக்கும், தனியாக, பெண்களுக்காக,—பேமிலி கோர்ட்ஸ்—குடும்ப நீதி மன்றங்கள் என்று அனைத்து மாவட்ட அளவிலேயும் கொண்டுவர அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தலைமை குற்ற விசாரணை நீதிமன்றம்

526—(*வினா எண். 12319) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் Chief Judicial Magistrate Court அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?